பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 03 சனிக்கிழமை 19.09.2020 கதிர் 184

## நவாலி வயலில் விவசாயி சாவு!

யாழ்ப்பாணம், செப் 19

நவாலி வயல் வெளியில் விவசாயி ஒருவர், இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வயலில் வரம்பு கட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த போது அவர் உயிரிழந்துள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

2

# திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதித்து நீதி செய்யுங்கள்!

## தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு கோட்டாவுக்குக் கடிதம்



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 19

தமது மக்களின் சட்ட ரீதியான உரிமைகளுக்காகத் தமது உயிரை அர்ப்பணித்தவர்களைத் தனித்தும், ஒன்று சேர்ந்தும் நினைவேந்தல் செய்யும் உரிமை ஐக்கிய நாடுகள் சாசனங்கள் மற்றும் சர்வதேச பட்டயங்களின்படி மக்கள் கூட்டங்களுக்கு உள்ளது. அதனடிப்படையில், சாகும் வரை உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த போராளி திலீபனை நினைவேந்தல் செய்வதற்கு தமிழ் மக்களுக்குள்ள உரிமையை ஏற்று, அந்த நிகழ்வுகளுக்குத் தடைவிதிப்பதை விலக்கி, அனுமதிக்க நடவடிக்கை எடுக்கவும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு கடிதம் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கோரியுள்ளனர்.

2

## 12 முதலைக் குட்டிகளும் முதலையும் வவுனியாவில் கிணறு ஒன்றிருந்து மீட்பு



வவுனியா-குருந்து பிட்டி பிரதேசத்தில் கிணற்றில் விழுந்த 12 முதலை குட்டிகள் மற்றும்முதலையைமீட்ட பிரதேசவாசிகள் அவற்றைக் காட்டுப் பகுதியில் எடுத்துச் சென்று விட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாகத் தண்ணீர் தேடி இந்த முதலையும், குட்டிகளும் வந்திருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

காணி ஒன்றின் உரிமையாளர்,

2

## முன்னைய கூட்டத்துக்கு முறைப்படியான அழைப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு வரவில்லையாம்!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,செப்.19

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியினருக்கு இன்று தான் முறைப்படி அழைப்பு கிடைத்தது. முறைப்படி அழைக்காததாலேயே நேற்று இடம்பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என அக்கட்சியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம்சுகாஷ்தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கொடுக்கவுள்ள கடிதத்தில் கையப்பமிடுவதற்காக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தின் அலுவலகத்தில் அனைத்து கட்சியினரும் சமுகமளித்திருந்தனர். அதில் முன்னணி சார்பில் சுகாஷ் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

தியாக தீபம் திலீபன்

2

## நுவரெலியாவில் இன்று 3 கடைகள் எரிந்து நாசம்



நுவரெலியா – இராகலை நகரில் அமைந்துள்ள வர்த்தக கட்டடத் தொகுதியொன்றில் ஏற்பட்ட தீயால் மூன்று கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராகலை நகரில் ஸ்ரீ கதிர்வேலாயுத ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதியிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

2

## செம்மணி மயானத்தினுள் வன்முறைக் குழு புதைத்து வைத்திருந்த வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணத்தில் செயற்படும் வன்முறைக் கும்பல் ஒன்றால் செம்மணி இந்து மயான வளாகத்தினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி மற்றும் கைக்குண்டு ஆகியன விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இன்று அந்த மயானப் பகுதியில் இருந்து அந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கல்வியங்காடுப் பகுதியில் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த விக்டர் சுந்தர் மீது தாக்குதல்



நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 'ஆவா' வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நிசா விக்டரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில்

2

## வெளியில் இருந்து முன்வைக்கப்படும் நல்லிணக்கக் கட்டமைப்பை ஏற்கோம்!

### ஜெனிவாவில் கோட்டாபய அரசு திட்டவட்டம்

கொழும்பு, செப்.19

இலங்கைக்கு வெளியிலிருந்து முன்வைக்கப்படும்நல்லிணக்ககட்டமைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என அரசு ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு தெரிவித்துள்ளது.

நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக உண்மையான நல்லிணக்கத்தை வழங்கத் தவறிய வெளிப்புறமாக இயக்கப்படும் ஒரு கட்டமைப்பைத் தொடர விரும்புவதற்குப் பதிலாக இலங்கையின் நலனுக்காக, மக்கள் வழங்கிய கட்டளைகளின் ஆதரவுடன் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாக அரசு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 45 ஆவது அமர்வில், உண்மைநீதி இழப்பீடு மற்றும் மீளநிகழாமை ஆகியவற்றை உறுதிசெய்வதற்கான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளருடனான

2

## தனுரொக் உள்ளிட்ட 9 பேர் சந்தேகத்தில் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப்.19

மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் உள்ளிட்ட 9 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 9 பேரும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தனுரொக் உள்ளிட்ட 9 பேர் ஒன்றுகூடியுள்ளதால் வன்முறைச் சம்பவம் இடம்பெறலாமென கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

2

## ரணில் உள்ளிட்ட பலர் அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணைக் குழுவுக்கு அழைப்பு

கொழும்பு, செப்.19

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, சம்பிக்க ரணவக்க, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட கடந்த அரசின் முக்கியஸ்தர்கள் சிலர், அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுடன் ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் அந்த ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

2



காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## முன்னைய கூட்டத்துக்கு முறைப்படியான ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அண்ணாவின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை தாண்டுவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தோம். தற்போது மேன்முறையீடு செய்வதற்கு தயாராகி வருகின்றோம்.

இந் நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இன்று காலையில் எமது கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை தடைசெய்யப்பட்டமை தொடர்பில் பொது நிலைப்பாடு தொடர்பான கூட்டத்தில் எங்களது கட்சியயையும் கலந்து கொள்ளுமாறு நேரடியாக அழைப்பு விடுத்தார். அதன் பிரகாரம் எங்களுடைய கட்சி இந்த அனைத்துக் கட்சிக் கூட்டதிலே கலந்து கொண்டது.

உண்மையில் இன்று தான் முதற் தடவையாக மாவை சேனாதிராஜா எமது கட்சியின் தலைவரை தொடர்பு கொண்டிருந்தார். இதற்கு முன்னர் முறைப்படி அழைப்பு கிடைக்கவில்லை. அதனாலேயே நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை

இன்று அழைப்பு விடுக்கப்பட்டதன் அதனடிப்படையில் எமது கட்சி சார்பாக சட்ட ஆலோசகர்களான நானும் காண்டீபனும் கலந்து கொண்டு எமது கட்சி சார்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தோம்.

தியாகி தீபம் திலீபன் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் அபிலாசைகளை நிலைநிறுத்தி அகிம்சை வழியில் உண்ணா விரதப் போராட்டத்தினை மேற்கொண்டு உயிர்தியாகம் செய்த ஒரு வீர மறவர். அவரை தமிழ் மக்கள் ஒன்று கூடி நினைவுகூர்வதற்கு இந்த அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். இது ஒரு மனிதனின் அடிப்படை உரிமை.

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் அடிப்படையிலும் மனித உரிமைகள் சாசனத்தின் அடிப்படையிலும் இறந்த ஒரு நபரை நினைவு கூர்வதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. அந்த உரிமையை வலியுறுத்தி தியாக தீபம் திலீபனினை நினைவு கூர்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தெரிவித்திருந்தோம். - என்றார்.

## வெளியில் இருந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடலின்போதே இலங்கை பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் கீழ் தன்னார்வ கடமைகளுக்கு இணங்க நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்களின் பிரச்சினைகளின் நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு அரசு செயல்படும் என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஐ.நா. விசேட அறிக்கையாளரின் சிறப்பு அறிக்கையில் இலங்கை குறித்த பல கவலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

விசேட அறிக்கையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் உண்மை நீதி இழப்பீடு மீளநிகழாமை போன்ற விடயங்களில் சாதிக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை, அறிக்கையாளர் தனது அறிக்கையில் உண்மையாகவும் சாதகமாகவும் குறிப்பிடவில்லை என இலங்கை தெரிவித்துள்ளது.

உள்நாட்டு முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், ஐ.நா மனித உரிமைகள் பொறிமுறைகள், உள்நாட்டு முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப சர்வதேச சமூகத்துடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படுவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## தனுரொக் உள்ளிட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும் சந்தேக நபர்கள் 9 பேருக்கும் எந்தவொரு வழக்கும் நீதிமன்றங்களில் நிலுவையில் இல்லை என்றும் முறைப்பாடுகள் எவையும் மானிப்பாய் பொலிஸில் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனுரொக் உள்ளிட்ட 9 பேரும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரணில் உள்ளிட்ட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி இன்று முற்பகல் இவர்கள் அனைவரும் ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகியுள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசின்போது தான் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டதாகத் தெரிவித்து, திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்கவினால் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டுக்கு அமையவே, இவர்கள் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## நுவரெலியாவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நுவரெலியா மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரும், இராகலைப் பொலிஸாரும், பிரதேச பொதுமக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும், பொருள்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

எவ்வாறாயினும் தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராகலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## செம்மணி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செம்மணிப் பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவேடி என்பனவும் மறைத்து வைத்திருந்தமை தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் செம்மணி இந்து மயானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் இன்று விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

## 12 முதலைக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணியில் இருந்த கிணற்றில் விழுந்து கிடந்த முதலை கண்டு பிரதேசவாசிகளுடன் இணைந்து மீட்டுள்ளதுடன் பின்னர் மேலும் 12 முதலை குட்டிகள் கிணற்றில் இருந்து மீட்டுள்ளனர்.

பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் இவை மீட்கப்பட்டுள்ளன.

அருகில் உள்ள குளம் வற்றியுள்ளதால் அங்கு வாழும் முதலைகள் தண்ணீர் தேடி கிராமத்திற்குள் வந்து கிணற்றில் விழுந்துள்ளதாக பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

## நவாலி வயலில் ..........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நவாலியைச் சேர்ந்த செல்லத்துரை கனகரத்தினம் (வயது -68) என்பவரே உயிரிழந்தார்.

கை மற்றும் காலில் சிறு காயம் காணப்படுவதால் பாம்பு தீண்டியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

## திலீபனின் நினைவேந்தலுக்கு ..................



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் இல்லத்தில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்திலேயே கையொப்பம் இடப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவின் அழைப்பின் பெயரில் நேற்றைய தினம் (18) தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் ஒன்று கூடி கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்து இருந்தனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிக்கப் போடப்பட்ட அனைத்து தடைகளும் உடனடியாக ஓரிரு நாள்களில் நீக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசாங்கம் செய்யாத இடத்தில் பல தொடர் போராட்டங்களை ஜனநாயக ரீதியில் ஒன்று கூடி முன்னெடுத்துத் தமது எதிர்ப்பை வளிப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கான எழுத்துமூல கடிதம் ஒன்றை அனுப்புவதற்காக வடக்கு மாகாண அவைத் தலைவரின் இல்லத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று கூடினர். இந்தக் கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து கொண்டனர்.

இதன்படி தமிழ்தேசிய பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இணைந்து குறித்த கடொதத்தில் கையொப்பமிட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மின்னஞ்சல் ஊடாகவும், பதிவுத்தபால் ஊடாகவும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்துக்குப் பதில் கிடைக்காத இடத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கட்சி பிரமுகர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கடிதத்தில் பின்வருவோர் ஒப்பமிட்டுள்ளனர்:-

* மாவை சோ. சேனாதிராசா - இலங்கைத் தமிழரசுக் கட்சி
* ஜி.ஜி.பொன்னம்பலம் எம்.பி. - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
* எஸ். சிறீதரன் எம்.பி. - இலங்கைத் தமிழரசுக் கட்சி.
* எஸ்.கஜேந்திரன் எம்.பி. - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
* கே. பிறேமச்சந்திரன் - ஈ.பி.ஆர்.எல்.எவ் (தமிழ் மக்கள் தேசியக் கட்சி)
* என்.சிறீகாந்தா - தமிழ்த் தேசியக் கட்சி
* ஜி. சுரேந்திரன் - ரெலோ
* அனந்தி சசிதரன் - ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்
* சி.வீ.கே.சிவஞானம் - இலங்கைத் தமிழரசுக் கட்சி
* பி.கஜதீபன் - புளொட்
* எம்.கே. சிவாஜிலிங்கம் - தமிழ்த் தேசியக் கட்சி
* ரி.சிற்பரன் - தமிழ் மக்கள் தேசியக் கட்சி
* பி.ஐங்கரநேசன் - தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்
* பி.சிவநாதன் - தமிழ் மக்கள் தேசியக் கட்சி




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ்த் தேசியத்தின் எதிரிகள்

பின்னடைவிலும் நல்ல வாய்ப்பு என்பதை ஆங்கிலத்தில் a blessing in disguise என்பார்கள்.

அப்படி ஒரு நல்ல சந்தர்ப்பம் தமிழர்களுக்கு இப்போது கிட்டியிருக்கின்றது. அதை சரிவரப் பயன்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாகப் பற்றிக் கொள்வதில்தான் தமிழர் தரப்பின் மதியூகம் தங்கியிருக்கின்றது எனலாம்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தமிழர்களைப் பொறுத்தவரை பெரும் பின்னடைவுதான். கடந்த நாற்பது, ஐம்பது ஆண்டு கால சரித்திரத்தில் தமிழினம் இப்படி அரசியல் ரீதியாகவும் வலிமை குன்றி, சிதறி, சின்னாபின்னமாகித் தனது தனித்துவத்தை இழக்கும் பேரபாயத்தில் சிக்கியிருக்கவில்லை.

சிறுபான்மையினரான தமிழர்களை – தமிழினத்தை – இந்த இலங்கைத் தீவின் இரண்டாம் தரப் பிரஜைகளாக்குவோம் என்று வெளிப்படையாகக் கங்கணம் கட்டி, அதைப் பிரகடனப்படுத்தி, வெட்ட வெளிச்சமாக மேற்கொண்டு வரும் பௌத்த, சிங்களப் பேரினவாதம், தெற்கில் மிகப் பலமான நிலையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

அதேசமயம் மறுபுறம் தமிழினத்துக்குக் கேடு இரண்டு வழிகளில் ஏற்பட்டிருக்கின்றது.

ஒன்று – தமிழ்த் தேசியம் பேசுகின்ற தங்களுக்குள் தமிழினம் பிரிந்து, பிளந்து, முரண்பட்டு, முட்டி மோதி, நலிவுற்றுப் போய் நிற்கின்றமை.

அடுத்தது – மறுபுறத்தில் தமிழ்த் தேசியத்தைக் கபளீகரம் செய்யக் கங்கணம் கட்டி நிற்கும் சிங்களத் தேசிய சக்திகள், கட்சிகள் தமிழர்களுக்குள் வெற்றிகரமாக ஊருருவி அவர்களின் பிரதிநிதித்துவத்தையும் கைப்பற்றும் கோடாரிக்காம்பு விவகாரமும் தாராளமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றமை.

இந்தப் பேராபத்தான சூழ்நிலையில்தான் தமிழர் மீதான சிங்கள அரசின் அடக்குமுறை நடவடிக்கை ஒன்று தமிழ்த் தேசிய சக்திகளை ஒன்றுபட – ஒரு மேசைக்கும் ஒரு மேடைக்கும் – வர வைத்திருக்கின்றது.

ஆட்சியாளர்களின் பேரினவாத மேலாண்மைக் கெடுபிடிகள் தமிழ்த் தேசிய சக்திகளை ஒன்றுபட வைத்திருக்கின்றன.

அறவழியில் – காந்தீய நெறியில் – அகிம்சை மார்க்கத்தில், உலக நாடுகள் எல்லாமுமே அங்கீகரித்த ஒரு வழி முறையில், தன் இனத்தின் உரிமைக்காக தன்னையே வருத்தி, ஆகுதியாக்கிய ஓர் அரசியல் போராளியை, பயங்கரவாதியாகச் சித்திரித்து, அதனடிப்படையில் அந்தப் போராளியை நினைவேந்தல் செய்வதைத் தடுத்ததன் மூலம் தனது பேரினவாதத் தீவிரத்தைத் தமிழர்கள் மீது கொட்டி, மீண்டும் ஓர் அடக்குமுறை அத்தியாயத்தைக் கட்டவிழ்ந்து விட்டிருக்கின்றது சிங்களம்.

அவ்வாறு முறையற்ற அடக்குமுறை நடவடிக்கை, இதுவரை காலமும் பிரிந்து நின்ற தமிழ்த் தேசிய சக்திகளை ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய கட்டாயத்தை அவர்களுக்கு உணர்த்தி, ஒழுங்குமுறைக்குள் கொண்டு வந்திருக்கின்றது என்பது உண்மை.

தமிழ்க் கட்சிகளின் இதுவரையான நடவடிக்கைகள், பொதுத் தேர்தல் பெறுபேறுகள், அதன் பின் தமிழர்களுக்கு எதிராகத் தென்னிலங்கை கொண்டிருக்கும் அடக்குமுறைப் பேரெழுச்சி, தமிழர்களின் தற்போதைய ஆபத்தான இக்கட்டுச் சூழல் என்பவை எல்லாம் தமிழ் மக்களை இப்போது ஆழமாக, விவரமாக, நுட்பமாகச் சிந்திக்க வைத்திருக்கின்றன என்பது திண்ணம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியச் சக்திகள் ஒன்றிணையா விட்டால் இனிமேல் தமிழர்களுக்கு மீட்சியே இல்லை என்ற கந்தறு நிலைமையைத் தமிழ்த் தேசிய சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

கட்சி, அரசியல், கொள்கைகள், கோட்பாடுகள், அணிகள், கன்னைகள் கடந்து தமிழ்த் தேசியம் பேசும் சக்திகள் சிந்திக்க முன்வர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் கொள்கை, கோட்பாடுகளின் பெயரில் தனித்துவம் பேசி, தனித்து நின்று அரசியல் செய்வது , தமிழர்களைக் கன்னை பிரித்து சின்னாபின்னமாக்கும் சிறுமைத்தனம் என்பதை, தேசியத்தின் பெயரால் தனித்துவம் பேசி நாசம் செய்யும் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் எதிரிகளுக்குத் துணை போகும் இரண்டு தரப்புத் துரோகங்களை தமிழர்கள் அடையாளம் காண வேண்டும்.

ஒரு தரப்பு – பௌத்த, சிங்கள அடக்குமுறையாளர்களினதும் பேரினவாதிகளினதும் எடுபிடிகளாக இங்கு செயற்படுவோர்.

மறு தரப்பு – தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு தமிழ்த் தேசிய சக்திகளை ஒன்றுபட்டு எதிரிகளை எதிர்கொள்ள விடாது, பிரித்து வைத்து, பிளவு நாச வேலையைத் தொடர்வோர்.

இந்த இரண்டு தரப்புகளையும் தமிழர்கள் சரியாக அடையாளம் காண்பார்களானால் தமிழ்த் தேசியத்தை நமது தாயகத்தில் இனியும் கூடக் காப்பாற்றலாம் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியும்.

# மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும்!

## அங்கஜன் உறுதி



மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தற்போதுள்ள அரசாங்கத்தால் நிச்சயம் தீர்வு வழங்கப்படுமென யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயகத்தில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் அங்கஜன் இராமநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த 14 ஆம் திகதி திகதி யாழ்.வருகை தந்த வீடமைப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அறிந்து கொண்டுள்ளார்.

அவர்களுக்கு நானும், யாழ்.மாவட்டத்தின் வீடமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக விளக்கம் தெரிவித்திருந்தேன். அந்த விடயம் தொடர்பாக அதிகூடிய கரிசணை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த உறுதியளித்தார்.

அது மட்டுமன்றி வீடமைப்பு தொடர்பான அமைச்சராக இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வடபகுதி மக்களின் வீட்டுத்திட்ட பிரச்சினை தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டிலிருந்து பல அரசாங்கங்கள் மாறிவிட்டன. நிம்மதியான இருப்பிடங்கள் தேடிய உறவுகளின் தலைமுறைகள் மாறப்போகிறது ஆனால் நிரந்தர தீர்வுகள் இன்னும் கிடைக்கவில்லை.

எமது இந்த புதிய அரசாங்கம் மூலம் விரைவில் காணி அற்றவர்களுக்கான காணி கொள்வனவு, வீடுகள் இல்லாமல் தவிப்போருக்கான வீட்டுத்திட்டங்களை இனம்கண்டு வழங்கல், நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களுக்கு சொந்த வீடுகள் வழங்கல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பெற்று மக்களுக்குக் கொடுப்போம்.

ஜனாதிபதி கூட நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீடமைப்பு சம்பந்தமான கலந்துரையாடலின்போது வட.மாகாணத்தில் 22 நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற 409 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்து மீண்டும் உடனடியாக அவர்களை மீள்குடியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கிரிக்கெட்டா? கொரோனாவா? நாமல் தீர்மானிக்கவேண்டும்!

## மனோ கணேசன் காட்டம்



கிரிக்கெட்டா, கொரோனாவா என நாமல் தீர்மானிக்க வேண்டும் எனத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா நோயாளரில் பெரும்பாலோர் வெளிநாடு சென்று வந்தோர்.

இந்நிலையில், இலங்கை வரவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, நமது சுகாதார துறையின் 14 நாள் தனிமைப்படுத்தல் பரிந்துரையை ஏற்க மறுக்கிறார்கள்.

ஆகவே விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கிரிக்கெட்டா, கொரோனாவா எனத் தீர்மானிக்க வேண்டும். – என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# அப்புத்தளையில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 6 பெண்கள் கவலைக்கிடம்



பதுளை, செப்.19

பதுளை, அப்புத்தளை பகுதியின் அப்புத்தளை பெருந்தோட்டப் பிரிவில் தேயிலைத் தளிர்களைக் கொய்து கொண்டிருந்த பத்து பெண் தொழிலாளர்கள், குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் இன்று மதியம் அப்புத்தளை பெருந்தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

குளவிக் கொட்டுக்கிலக்கான பத்து பெண் தொழிலாளர்களும், ஹப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் ஆறு பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண் தொழிலாளர்கள் தொழில் கடமைகளில் ஈடுபட்டிருந்த வேளையில், மரமொன்றிலிருந்து குளவிக்கூடு கலைந்து, கடமைகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை கொட்டத் தொடங்கின.

உடனடியாக அத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்தின் மூலம் வாகனமொன்றில் ஹப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, ஹப்புத்தளைப் பகுதியின் பங்கட்டி என்ற பெருந்தோட்டத்தில் ஆண் ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி, ஹப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# உயர் கல்விச் சேர்க்கையில் தமிழகம்தான் முதலாமிடம்!



## முதல்வர் பழனிசாமி புகழாரம்

உயர்கல்வி சேர்க்கையில் இந்தியாவில் தமிழகம் தான் முதலிடத்தில் உள்ளது என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் தனியார் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் காணொலி காட்சி மூலம் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சிறப்பு உரையாற்றினார். அப்போது பேசிய அவர் –

மாணவர்கள் குறைந்த செலவில் தரமான கல்வி பெறுவதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும், நாட்டில், உயர்கல்வி வழங்கும் கல்வி நிலையங்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் 100 இடங்களுக்குள் தமிழகத்தைச் சேர்ந்த 18 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

முன்னோடி திட்டங்களால் மாணவர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், உயர் கல்வியில் சேரும் மாணவ, மாணவிகளின் விகிதம் தமிழகத்தில் 49 வீதம் உயர்ந்துள்ளதாகவும் எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அறிவுசார் சமுதாயம் அமைய அனைவருக்கும் கல்வி அவசியம் தேவை எனவும், அனைவருக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்வதில் தமிழகம் முதல் மாநிலமாக விளங்குவதாகவும் தெரிவித்தார்.

அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம் என மாணவர்களுக்கு அறிவுறுத்திய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தமிழகத்தில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டு உள்ளன எனவும், கொரோனா பொது முடக்கக் காலத்தில் தமிழகத்தில் தான் அதிகளவில் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் கொரோனா 52 லட்சத்தைக் கடந்தது!

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 52 லட்சத்து 14 ஆயிரத்து 677 ஆக அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மட்டும் 96 ஆயிரத்து 424 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் கொரோனா தொற்றில் இருந்து இதுவரை 41 லட்சத்து 12 ஆயிரத்து 551 பேர் மீண்டுள்ளனர் என்றும் மொத்த பாதிப்பில் இது 78.86 சதவீதமாகும் என்றும் மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மட்டும் 1,174 பேர் உயிரிழந்த நிலையில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 84 ஆயிரத்து 372 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் மகாரா;டிர மாநிலத்தில் அதிகபட்சமாக 31 ஆயிரத்து 351 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் மகாரா;ஷ்ரா, ஆந்திரா, தமிழ்நாடு, காநாடகம், உத்தர பிரதேசம் ஆகிய 5 மாநிலங்களிலேயே கொரோனா தொற்று அதிகம் காணப்படுவதுடன் அந்த மாநிலங்களில்தான் குணமடைந்தோர் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

கடந்த 11 நாள்களாக நாடு முழுவதும் தினமும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவில் இருந்து குணமடைந்துள்ளனர் என்றும் மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## நீதித்துறை மீது நம்பிக்கை வைத்துள்ளாராம் சூர்யா!



இந்தியநீதித்துறையின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளதாக நடிகர் சூர்யா தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு அச்சம் காரணமாக மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டமை தொடர்பாக அறிக்கை வெளியிட்ட நடிகர் சூர்யா, நீதிமன்றத்தின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தியதாக சர்ச்சை எழுந்தது.

இந்நிலையில், நடிகர் சூர்யா மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை தேவையில்லை என தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை வரவேற்று ட்விட்டரில் பதிவிட்டுள்ள சூர்யா, இந்திய நீதித்துறையின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நீதித்துறை தான் மக்களின் அரசமைப்பு உரிமைகளை உறுதி செய்கிறது எனவும் கூறியுள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் நியாயமான உத்தரவுகளை தாழ்மையுடன் ஏற்கிறார் எனவும் நடிகர் சூர்யா குறிப்பிட்டுள்ளார்.

# லவ் ஜிகாத்துக்கு எதிராக அவசரச் சட்டம் வரலாம்!

## உத்தரப் பிரதேச முதல்வர்



காதல் என்ற பெயரில் மதமாற்றத்தை ஏற்படுத்தும் லவ் ஜிகாத் செயற்பாடுகளைத் தடுக்கத் தேவைப்பட்டால் அவசரச் சட்டம் கொண்டு வருவதற்கான வழிமுறைகளை ஆராய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்.

இது தொடர்பாக பெயர் கூற விரும்பாத அதிகாரி ஒருவர் ஊடகம் ஒன்றுக்குக் கூறும்போது –

காதல், திருமணம் என்ற பெயரில் சமீபமாகக் கூட பெண்களை மயக்கி மதம் மாற்றி பிறகு கொடுமைப்படுத்தி கொலை வரையிலும் நடைபெறுகிறது.

இதுகுறித்து அவதானம் செலுத்தியுள்ள முதல்வர் இத்தகைய சம்பவங்களைத் தடுக்க நல்ல உபாயத்தை வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இதை நல்ல ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செய்ய வேண்டும். இத்தகைய குற்றங்களைத் தடுப்பதும் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதை உத்தரவாதம் செய்யவும் சட்டம் அவசியம் என்று முதல்வர் உணர்கிறார். – என்றார்.

## கேரள அரசுக்கு எதிராக இரண்டு வழக்குகள் பதிவு!

தங்கக் கடத்தல் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், கேரள அரசுக்கு எதிராக 2 வழக்குகளை சுங்கத்துறை பதிவு செய்துள்ளது.

கேரளாவில் உள்ள ஐக்கிய அரபு அமீரக தூதகரம் வழியாக தங்கம் கடத்தியதாக முன்னாள் அதிகாரி ஸ்வப்னா சுரே;, சந்தீப் நாயர் உள்ளிட்ட 20 இற்;கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பாக என்.ஐ.ஏ, அமுலாக்கத்துறை, சுங்கத்துறை உள்ளிட்ட அமைப்புகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றன. இந்த நிலை யில், கேரள அரசுக்கு எதிராக 2 வழக்குகளை சுங்கத்துறை பதிவு செய்துள்ளது.

ஐக்கிய அரசு அமீரக தூதரகம் மூலம் இறக்குமதி செய்த திருக்குரான் புத்தகங்கள் மற்றும் 18 ஆயிரம் கிலோ பேரிச்சம்பழங்களை பெற்றுக்கொண்டதாக கேரள அரசுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## நீட் தேர்வு விவகாரத்தில் தி.மு.க. அரசியல் நாடகம்!

### போட்டுத் தாக்குகிறார் வி.துரைசாமி



நீட்தேர்வுவிவகாரத்தில் திமுக அரசியல் நாடகம் நடத்துவதாக பாஜக துணைத் தலைவர் வி.பி. துரைசாமி விமர்சித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய பாஜக மாநில துணை தலைவர் வி.பி துரைசாமி, தமிழகத்தில் மகத்தான வளர்ச்சிப் பாதையில் பா.ஜ.க. சென்று கொண்டிருப்பதாகவும், பாஜகவை ஆதரிப்பவர்களே தமிழகத்தில் ஆட்சியில் அமர்வார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

திமுகவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்தப் பதவியும் கொடுக்கப்படுவது இல்லை எனத் தெரிவித்த அவர், மாநிலத் தலைவராக தாழ்த்தப்பட்டவரை பாஜக நியமித்தமை போல தி.மு.க. நியமிக்க தயாரா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், ஸ்டாலினின் முதல்வராகும் கனவு எப்போதும் பலிக்காது எனத் தெரிவித்தார். தொடர்ந்து நீட் தேர்வைக் கொண்டு வந்தது காங்கிரஸும் திமுகவும் தான் ஆனால் தற்போது நீட்தேர்வு விவகாரத்தில் திமுக அரசியல் நாடகம் நடத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

# மதுசூதனன் தலைமையில் 28 இல் கூடுகிறது அ.தி.மு.க.!





அதிமுக செயற்குழு கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை ராயப்பேட்டை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், அமைச்சர்கள், தலைமை நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், வருகிற சட்டப்பேரவை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது உள்ளிட்டவை தொடர்பாக விவாதிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதில் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பான உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிகிறது. கூட்டம் நிறைவுபெற்ற பின்னர் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் ஆகியோர் கோபமாக சென்றுவிட்டனா எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் 28ஆம் திகதி அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் மதுசூதனன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழ் உள்ள உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## விவசாய சட்டங்கள் குறித்து விவாதம்; 21 இல் அனைத்துக் கட்சிகள் கூட்டம்!

### திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அழைப்பு

விவசாயிகளுக்கு விரோதமான மத்திய அரசின் சட்ட மூலங்கள் தொடர்பாக விவாதிக்க எதிர்வரும் திங்கட்கிழமை காலை அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 விவசாய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், விவசாயிகளுக்கு எதிரான சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், விவசாயிகளுக்கு விரோதமான மத்திய அரசின் மசோதாக்கள் தொடர்பாக விவாதிக்க, எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தோழமைக் கட்சிக் கூட்டத்தில் விவசாய சட்ட மூலங்கள்தொடர்பாக கட்சித் தலைவர்கள் ஆலோசிக்க உள்ளனர்.

# நியூயோர்க்கில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி; பலர் படுகாயம்!



நியூயோர்க்கின் றொசெஸ்ரர் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் இன்று (சனிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது, 13 பேர்வரை காயமடைந்துள்ளனாட என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூடு மக்கள் கூடியிருந்த பகுதியொன்றில் இடம்பெற்றுள்ள நிலையில், பாதிப்பு தொடர்பான முழுமையான தகவலை பொலிஸார் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

# டிக்டொக், வீ இசற் செயலிகளை தரைவிறக்க அமெரிக்கா தடை

சீன நிறுவனத்திற்குச் சொந்தமான, டிக்டொக் மற்றும் வீ இசட் செயலிகளை பதிவிறக்குவதற்கான தடையை நாளை முதல் விதிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் சீனாவிற்கு சொந்தமான செயலிகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறி அதனை தடை செய்வது தொடர்பாக ஆராய்ந்து வந்தது.

இந்நிலையில், டிக்டொக் மற்றும் வீ இசட் செயலிகளுக்கான தடையை ஞாயிற்றுக்கிழமை செயற்படுத்த அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து சீன மொழி பேசுபவர்களிடையே பாரிய பயன்பாட்டைக்கொண்ட வீ இசட்டையும் அப்பிள், கூகுள் இயக்கப்படும் ஒன்லைன் சந்தைகளிலிருந்து டிக்டொக்கையும் தடை செய்யவுள்ளது.

அமெரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை முதல் வீ இசட் தடைசெய்யப்படும் அதேவேளை, தற்போது டிக்டொக்கை பயன்படுத்தும் பயனர்களால் நவம்பர் 12 ஆம் திகதி வரை பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு முன்னர் டிக்டொக் தொடர்பான தேசிய பாதுகாப்பு சந்தேகங்கள் தீர்க்கப்பட்டால், உத்தரவு நீக்கப்படலாம் என்று வர்த்தகத் துறையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு ஏப்ரலில் அமெரிக்கர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி மருந்து கிடைத்துவிடுமென எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெயில் கொரோனா பாதிப்பு 70 லட்சத்தை நெருங்குகிறது

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏழு மில்லியனை நெருங்குகின்றது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, அமெரிக்காவில் இதுவரை 69 லட்சத்து 25 ஆயிரத்து 941 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த நாடாக விளங்கும் அமெரிக்காவில், இதுவரை இரண்டு லட்சத்து மூவாயிரத்து 171 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் அங்கு 51 ஆயிரத்து 345 பேர் பாதிக்கப்பட்டமையோடு, 958 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை 25 லட்சத்து 30 ஆயிரத்து 876 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில்; சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 14 ஆயிரத்து 179 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

அத்துடன், 41 லட்சத்து 91 ஆயிரத்து 89 4பேர் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# கனடாவில் 24 மணி நேரத்தில் 10 ஆயிரத்துக்கும் மேல் பாதிப்பு

கனடாவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்றால், கடந்த 24 மணித்தியாலத்தில் ஆயிரத்து 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 26 ஆவது நாடாக விளங்கும் கனடாவில், இதுவரை ஒரு லட்சத்து 41 ஆயிரத்து மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், மொத்தமாக 9 ஆயிரத்து 205 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், எட்டாயிரத்து 983 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு லட்சத்து 23 ஆயிராயிரத்து 723 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதுதவிர, 82 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்பெயினில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால், 6 லட்சத்து 59 ஆயிரத்து 334 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 ஆயித்து 495 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஆஸ்திரேலிய தலைநகரில் கட்டுப்பாடுகளை நீக்க முடிவு

ஆஸ்திரேலிய தலைநகர் கான்பெரா எல்லையில் விதிக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்று பரவல் கட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன.

இதுதொடர்பாககுவீன்ஸ்லாந்து மாகாண அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்வரும் 25ஆம் திகதி முதல் கான்பெரா எல்லையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கான்பெராவில் கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதியிலிருந்து புதிதாக யாருக்கும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில் இக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலைத் தடுப்பதற்காக, கான்பெரா நகர எல்லையில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த நகருக்கு வருவோர் அனைவரும், எல்லையிலுள்ள ஹோட்டலில் தனிமைப் படுத்தப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால், 26 ஆயிரத்து 885 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 844பேர் உயிரிழந்துள்ளனர்.

# குவாதமாலா ஜனாதிபதிக்கு கொரோனாத் தொற்று



லத்தீன் அமெரிக்க நாடான குவாதமாலாவின் ஜனாதிபதி அலெஜான்ட்ரோ கியாமட்டீ மற்றும் கலாசார அமைச்சர் லிடியட் சில்வானா ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்நாட்டு அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனக்கு, நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக உள்ளூர் வானொலியான சோனோராவில் கியாமட்டீ தெரிவித்தார்.

இந்நிலையில், அதிக காய்ச்சல் மற்றும் உடல்வலிகள் போன்ற அறிகுறிகள் உள்ளன எனவும் குவாதமாலா நகரத்தில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க அமைக்கப்பட்ட சென்ட்ரோ மெடிகோ மிலிட்டரில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் மீண்டும் கொரோனா கட்டுப்பாடு!

ஸ்பெயினின் தலைநகர் மட்ரிட்டின் பகுதிகள், கொவிட் – 19 தொற்று பரவலின் உயர்வைக் கட்டுப்படுத்த முடக்கநிலை கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட உள்ளன.

திங்கட்கிழமை முதல், மட்ரிட் பிராந்தியத்தில் 8 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள், பயணம் மற்றும் குழுக்களின் அளவுகளில் வரம்புகளை எதிர்கொள்வார்கள்.

ஐரோப்பாவில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் தொற்றுகள் ஸ்பெயினில் உள்ளன. மேலும் மட்ரிட் மீண்டும் மிக மோசமான பாதிப்புக்குள்ளான பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது.

பல வடக்கு அரைக்கோள நாடுகள், இப்போது குளிர்காலம் நெருங்கும்போது தொற்றுநோயின் இரண்டாவது அலையை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றன.

# சீன போர் விமானங்களை துரத்திய தாய்வான் படை!



பல சீன விமானங்கள் தீவை நெருங்கி, தாய்வான் ஜலசந்தியின் முக்கியமான நடுப்பகுதியைக் கடக்கும்போது, தொடர்ச்சியாக இரண்டாவது நாளாகவும் சீன விமானங்களை தாய்வானின் விமானப்படை துரத்தியுள்ளது.

அத்துடன், தாய்வான் அரசாங்கம் இதிலிருந்து பின்வாங்குமாறு பெய்ஜிங்கை வலியுறுத்தியுள்ளது.

தாய்வானின் பாதுகாப்பு அமைச்சகம், 19 சீன விமானங்கள் வான் பரப்பை வட்டமிட்டன எனத் தெரிவித்துள்ளது.

மேலும், முந்தைய நாளைக் காட்டிலும் ஒன்று, தாய்வான் நீரிணை நடுப்பகுதியைக் கடந்ததாகவும், மற்றைய விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் அதன் தென்மேற்கு கடற்கரையில் பறந்தன எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஜனநாயக தாய்வானை தனது சொந்த பிரதேசமாகக் கூறும் சீனா, 12 'ஜே – 16 போராளிகள்', இரண்டு 'ஜே – 10 போராளிகள்', இரண்டு 'ஜே – 11 போராளிகள்', இரண்டு 'எச் – 6 குண்டுவீச்சு' மற்றும் ஒரு 'ஒய் – 8 நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்களை அனுப்பியது.

அமைச்சு வழங்கிய வரைபடத்தின்படி, யாரும் தாய்வானின் பிரதான நிலப்பகுதியை நெருங்கவில்லை அல்லது அதன் மீது பறக்கவில்லை.

பொருளாதார விவகாரங்களுக்கான அமெரிக்க செயலாளர் கீத் கிராச், வியாழக்கிழமை தைபேக்கு மூன்று நாள் வருகைக்காக வந்திருந்த நிலையில், இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நான்கு தசாப்தங்களில் தாய்வானுக்கு வந்த மிக மூத்த வெளியுறவுத்துறை அதிகாரி கிராச், முன்னாள் ஜனாதிபதி லீ டெங் – ஹுய் என்பவரின் நினைவேந்தல் சேவைக்காக சனிக்கிழமை தாய்வானில் இருக்கிறார் என அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. தாய்வானில் மற்றும் சர்வதேச அளவில் தாய்வானின் ஜனநாயகத்தின் தந்தையாக லீ டெங் – ஹுய் பலரால் போற்றப்பட்டார்.

# அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமே உள்ளன!

## சரத் வீரசேகர சூளுரை



அரசியல் உள்நோக்கங்களுக்காகவே 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

மாகாணசபை முறைமையை இரத்து செய்ய வேண்டும் என நான் குறிப்பிட்ட தனிப்பிட்ட கருத்தை அரசியல்வாதிகள் அரசியல் மட்டத்தில் பிரதான பேசுபொருளாக மாற்றியமைத்து விட்டனர்..

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட போது நான் கடுமையாக எதிர்த்தேன். அன்றிலிருந்து இன்று வரை அதற்கு எதிராகவே கருத்துரைக்கின்றேன்

இந்தியாவால் 13 ஆவது திருத்தம் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்படவில்லை.

அரசியல் உள்நோக்கங்களுக்காகவே 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கிக் கொள்ளப்பட்டது. இதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

அதிகார பரலவாக்கம் மாகாணசபைகள் ஊடாக இடம் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது. அதனை ஒருபோதும் ஏற்க முடியாது.

மாகாண சபைகள் ஊடாக மக்களுக்கு சிறந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்க அதிகாரங்கள் வழங்கப்படுமே தவிர ஒருபோதும் பங்கிடப்படமாட்டா.

அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்திடமே காணப்படும். இவ்விடயத்தில் உறுதியாக உள்ளோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் வவுனியாவில் கைது!

வவுனியா - பன்றிகெய்தகுளத்தில் சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக ஒமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வவுனியா -பன்றிகெய்தகுளத்திலுள்ள வீடு ஒன்றில், சட்டவிரோதமாக துப்பாக்கி (இடியன்துவக்கு) ஒன்றை மறைத்து வைத்திருப்பதாக வவுனியா ஒமந்தை பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து, உப.பொலிஸ் பரிசோதகர் வ.அருளானந்தம் தலைமையிலான குழுவினரால் அந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டதுடன், அதனைத் தமது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஒமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப்.19

நாட்டில் நிலவி வரும் மழையுடனான காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை மாவட்டத்தின், புலத்சிங்கள பிரதேச செயலக பிரிவுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெரனியகல, தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நுவரெலிய மாவட்டத்தின் கொத்மலை மற்றும் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவுகளுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மதுல்ல, எலபாத்த, எஹெலியகொட, இரத்தினபுரி மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இருந்து இலங்கை விலகமாட்டாது!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை விலகுவதாக எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

முப்பதின் கீழ் ஒன்று பிரேரணையில் இருந்து இலங்கை இணை அனுசரணையாளர் என்ற ரீதியில் வெளியேறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளே தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது மாத்திரமே தெரிவிக்கப்பட்டது என அரசாங்கம் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை விலகப்போவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார் என நேற்றுமுன்தினம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில், இது தொடர்பாக தெளிவுபடுத்தும் வகையில் அரசாங்கம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில் -

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகரால் இலங்கை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கூற்று மற்றும் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியால் அந்தக் கூற்றுக்கு அளிக்கப்பட்ட பதில் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரால் 2020, செப்ரெம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கேட்கப்பட்டது.

இதற்கு, அமைச்சரவை இணைப்பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்லவால் தெரிவிக்கப்பட்ட பதில் அடங்கிய விடயங்களைத் தவறாக அர்த்தப்படுத்தும் வகையில் சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக சந்திப்பில் அமைச்சரால் அளிக்கப்பட்ட பதிலில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவில் இருந்து இலங்கை வெளியேறுவது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.

அத்தோடு, இலங்கை முப்பதின் கீழ் ஒன்று பிரேரணையில் இருந்து இணை அனுசரணையாளர் என்ற ரீதியில் வெளியேறுவதற்குத் தேவையான நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாத்திரமே குறிப்பிடப்பட்டது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலத்திரனியல் வடிவ குடும்ப அட்டை இலங்கையில் முதன்முதலாக அறிமுகம்!

இலங்கையில் முதல் முதலாக இலத்திரனியல் வடிவ குடும்ப விவர அட்டை கண்டாவளை பிரதேச செயலகத்தால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.


இந்த நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலாளரின் முயற்சியில் அப்பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில், இந்த இலத்திரனியல் குடும்ப அட்டை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக ஓர் குடும்பத்தின் சகல விவரங்களையும் இலத்திரனியல் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொதுமகன் ஒருவர், பிரதேச செயலகத்தின் கீழ் ஒரு விடயத்தை பெற்றுக்கொள்வதற்கு அல்லது சேவையை பெற்றுக்கொள்வதற்கு இலகுபடுத்தலாக இந்த இலத்திரனியல் குடும்ப அட்டை பயன்தரவுள்ளதாக கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

சேவை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வருகைதரும் பிரஜை, இலத்திரனியல் அட்டையை சமர்ப்பிக்கும்போது இலகுவாக சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

அதில் வாழ்வாதாரம், வீடு, குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட தேவையுடையவர்களை இலகுவாக அடையாளம் காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.




அதனடிப்படையில் நேற்று முதல் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்கள் தமது குடும்ப விவரங்களை இலத்திரனியல் இலகுபடுத்தலின் ஊடாக சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த இலத்திரனியல் குடும்ப அட்டையை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். தொடர்ந்து பொதுமக்களிற்கு இலத்திரனியல் அட்டை வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டி.ஜி.எஸ்.செனெரத்யபோ, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.சிறிமோகன், 571 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிக்கேடியர் டி.கே.எஸ்.கே.டொலகே, 572 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டி.எம்.பி.பி.டசநாயக, கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## செல்வாக்கால் வாகனம் ஓட்டிய 249 பேர் கைது!

### வாகனங்களும் பறிமுதல்

*491 பொலிஸ் நிலையங்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து நடவடிக்கையின்போது செல்வாக்கைப் பயன்படுத்தி வாகனம் ஓட்டிய 249 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*நாடு முழுவதும் இந்த நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி முதல்நேற்று சனிக்கிழமை காலை 4 மணி வரை நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த நடவடிக்கையின் போது 249 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இதற்கிடையில், போக்குவரத்து விதிமுறைகளை மீறியதற்காக 3,106 வழக்குகளை பதிவு செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*

*அதன்படி, எட்டு மணி நேர நடவடிக்கையின் போது 3,355 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2020 இல் வெளியிடப்பெற்றது.